**தமிழ்நாடு தகவல் ஆணையம்**

எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோயில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு
தேனாம்பேட்டை, சென்னை - 600 018. தொலைபேசி எண் 24347590

**ஆணை நாள்: 12.09.2019 (முற்பகல்)**

**முன்னிலை**

**திரு ச.செல்வராஜ், எம்.ஏ., பி.எட்.,**
**மாநில தகவல் ஆணையர்**

•••••••••

**வழக்கு எண்.SA 1526/E/2017**

திரு A.முகமது ரபி ... மேல்முறையீட்டாளர்

Vs.

பொதுத் தகவல் அலுவலர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
ஸ்ரீரங்கம் வட்டம்,
திருச்சி மாவட்டம். ... பொது அதிகார அமைப்பு

**பார்வை:-**

| | |
|---|---|
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1) கீழ் மனு செய்த நாள் | 10.02.2015 |
| முதல் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(1) | 13.07.2015 |
| இரண்டாம் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(3) | 21.02.2017 |

******

**ஆணை**

இன்று (12.09.2019) முற்பகலில் இவ்வாணையத்தில் நடைபெற்ற விசாரணைக்கு மேல்முறையீட்டாளர் திரு A.முகமது ரபி ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக, பொதுத் தகவல் அலுவலர், திரு பெ.முருகேசன், தலைமையிடத்துத் துணை வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், ஸ்ரீரங்கம் வட்டம், திருச்சி மாவட்டம் ஆஜரானார்.

2. மேல்முறையீட்டாளர் 10.02.2015 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் வட்டாட்சியர், ஸ்ரீரங்கம் அவர்களின் ந.க.எண்.அ1/2075/2012-இன் பிரகாரம் ஸ்ரீரங்கம் வட்டம், இனாம் குளத்தூர் கிராமம், புல எண்.730-இல் யு.டி.ஆர்.-இல் திருத்தம் செய்து பட்டா பெயர் மாற்றம் கோரி, திரு சௌகத் அலி என்பவர் கொடுத்த புகார் மனுவின் அடிப்படையில் விசாரணை செய்யப்பட்டவர்களின் விபரம், அந்த விசாரணையின் முடிவறிக்கை மற்றும் அந்த அறிக்கையின் மீது பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் நகல், மேற்படி புல எண்ணில் 1964-ஆம் ஆண்டு முதல் 1984 ஆண்டுவரையில் அனுபோக உரிமையுள்ளவர்களின் சிட்டா, அடங்கல் மற்றும் 'அ' பதிவேட்டின் நகல், மேற்படி நிலத்திற்கு நில உடைமைப் பதிவு மேம்பாட்டுத் திட்டம் தனி வட்டாட்சியர் அவர்களால் 1986-ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட நில உடைமை உரிமையாளர்களின் சிட்டா, அடங்கல் மற்றும் 'அ' பதிவேட்டின் நகல் என 4 இனங்களில் தகவல் கோரி, பொதுத் தகவல் அலுவலர், வட்டாட்சியர் அலுவலகம், ஸ்ரீரங்கம் வட்டம், திருச்சி மாவட்டம் என விலாசமிட்டுத் தாக்கல் செய்துள்ளார்.

3. பொதுத் தகவல் அலுவலரால் தான் கோரிய தகவல் வழங்கப்படவில்லையென்றும், தான் கோரிய தகவலை வழங்க ஆவன செய்யுமாறும் கோரி மேல்முறையீட்டாளர் 13.07.2015 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(1)-ன்கீழான முதல் மேல்முறையீட்டு மனுவை மேல்முறையீட்டு அலுவலர், வட்டாட்சியர் அலுவலகம், ஸ்ரீரங்கம், திருச்சி அவர்களுக்குத் தாக்கல் செய்துள்ளார். அதன் பின்னரும் பொது அதிகார அமைப்பினரால் தான் கோரிய தகவல் முழுமையாக வழங்கப்படவில்லையென்றும், தான் கோரிய தகவல் கிடைக்க வழிவகை செய்யுமாறும் கோரி மேல்முறையீட்டாளர் 21.02.2017 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(3)-ன்கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவை ஆணையத்திற்குத் தாக்கல் செய்துள்ளார். அவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (12.09.2019) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் மேல்முறையீட்டாளர் ஆஜராகி, தான் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள மனுவிற்குப் பொதுத் தகவல் அலுவலரால் தகவல் வழங்கப்படாததால், சட்டப்பிரிவு 19(1)-ன்கீழ் முதல் மேல்முறையீட்டு மனுவும், சட்டப்பிரிவு 19(3)-ன்கீழ் ஆணையத்திற்கு இரண்டாம் மேல்முறையீட்டு மனுவும் தாக்கல் செய்துள்ளதாகவும், இதுநாள்வரைப் பொது அதிகார அமைப்பினரால் முழுமையான தகவல் தனக்கு வழங்கப்படவில்லையென்றும், தான் கோரிய தகவலை முழுமையாக வழங்க பொதுத் தகவல் அலுவலருக்கு உத்திரவிடுமாறும் தனது வாதுரையை ஆணையத்தின் முன்பு எடுத்துரைத்தார். இதனை ஆணையம் பதிவு செய்கிறது.

5. இன்றைய விசாரணையில் பொது அதிகார அமைப்பின் சார்பாக ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மேல்முறையீட்டாளருக்கு 09.09.2019 தேதியிட்ட கடிதம் வாயிலாக வழங்கக்கூடிய தகவல் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து உரிய ஆவணங்களை ஆணையத்தின் முன்பு தாக்கல் செய்தார். இதனை ஆணையம் பதிவு செய்கின்றது.

6. பொதுத் தகவல் அலுவலரால் மேல்முறையீட்டாளருக்கு வழங்கப்பட்டுள்ள தகவலைப் பரிசீலனை செய்கையில், இனம் 4-ற்கு முழுமையான தகவல் வழங்கப்பட்டுள்ளதும், இனம் 3-ற்கு அடங்கல் நகல் வழங்கப்பட்டுள்ளதும், யு.டி.ஆர்-க்கு முந்தைய அ பதிவேடு மற்றும் சிட்டா வழங்கப்படவில்லையென்பதும், இனம் 1 மற்றும் 2-ற்குரிய தகவல் வழங்கப்படவில்லையென்பதும் தெரிய வருகிறது. இது குறித்துப் பொதுத் தகவல் அலுவலரிடம் வினவியபோது, மேற்படி தகவலை மீண்டும் தங்களது அலுவலக

ஆவணங்களில் தேடிப்பார்த்து, கிடைக்கப்பெறும்பட்சத்தில் 30 தினங்களுக்குள் வழங்குவதாக எழுத்துமூலமாக ஆணையத்திற்குத் தெரிவித்தார். பொதுத் தகவல் அலுவலரின் வாதுரையை ஆணையம் பதிவு செய்து, விசாரணையின் முடிவில் கீழ்க்கண்ட உத்திரவு பிறப்பிக்கப்படுகின்றது:

**மேல்முறையீட்டாளர் 10.02.2015 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 6(1)-ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் கோரியுள்ள இனம் 1, 2 ஆகியவற்றிற்குரிய தகவலையும் இனம் 3-ற்குரிய அ பதிவேடு மற்றும் சிட்டா நகலையும் தங்களது அலுவலக ஆவணங்களில் தேடிப்பார்த்து, கிடைக்கப்பெறும்பட்சத்தில், இவ்வாணை கிடைக்கப்பெற்ற 30 தினங்களுக்குள் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 7(6)-ன்கீழ் கட்டணம் ஏதுமின்றி ஒப்புகை அட்டையுடன்கூடிய பதிவஞ்சலில் மேல்முறையீட்டாளருக்கு அனுப்பி, அதனை அவர் பெற்று ஏற்பளிப்பு செய்த விபரத்தை இவ்வாணை கிடைக்கப்பெற்ற 45 தினங்களுக்குள் ஆணையத்திற்குச் சமர்ப்பிக்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு உத்திரவிடப்பட்டு, இவ்வழக்கில் மேலும் விசாரணை தேவையில்லையென ஆணையம் முடிவு செய்து இவ்வழக்கு இத்துடன் முற்றாக்கப்படுகின்றது.**

**ஒம்/- ச.செல்வராஜ்**
**மாநில தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண்.SA 1526/E/2017**
பெறுநர்

**பொது அதிகார அமைப்பு**

பொதுத் தகவல் அலுவலர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
ஸ்ரீரங்கம் வட்டம்,
திருச்சி மாவட்டம்.

**மனுதாரர்**

திரு A.முகமது ரபி,
த/பெ. அப்துல் ரஜாக் (லேட்),
2-411, தெற்குத் தெரு,
இனாம் குளத்தூர்,
ஸ்ரீரங்கம் வட்டம்,
திருச்சி மாவட்டம் - 620 009.

Copy to: Judgement File.
16/09/19